தமிழ்நாடு அரசு
கால்நடை பராமரிப்புத்துறை

திருவவள்ளூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையில் ஓட்டுநர் பதவிக்கு
தகுதியுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | பதவியின் பெயர் | காலி பணியிடங்களின் எண்ணிக்கை 01.07.2019 அன்றுள்ளபடி | இனசுழற்சி முறை | கல்வி மற்றும் பிற தகுதிகள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஓட்டுநர் | 1 | 1. SCA(W)(P)<br>2. SCA(G)(P) | 1) 8ம் வகுப்பு தேர்ச்சி<br>2)தமிழ் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>3)ஓட்டுநர் உரிமம் நாளது தேதி வரை புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.<br>4)ஊர்தி ஓட்டுவதில் குறைந்தபட்சம் 2 வருடம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். | Level-8<br>Rs.19500-62000/- |

1. விண்ணப்பதாரர் தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் வசிப்பதற்கான ஆதாரத்தின் நகலை இணைத்திட வேண்டும்.(ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்று)
2. காலிப்பணியிடங்கள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற விதவைகள் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்கள் ஆகியோரின் விகிதாச்சாரத்தை உள்ளடக்கியதாகும்.
3. மேற்கண்ட மூன்று பதவிகளுக்கும் விண்ணப்பதாரரின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது அருந்ததியர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியின வகுப்பினர்களுக்கு 35 ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர்(முஸ்லீம்) 32 ஆகும். பொதுப்பிரிவினருக்கு 30 ஆகும்.(01.07.2019 அன்றுள்ளபடி)
4. விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியர் இணையதளம் www.tiruvallur.tn.nic.in கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒரே விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் ரூ.5/– அஞ்சல் வில்லை ஒட்டிய சுய முகவரியிட்ட உறை ஒன்றினை வைத்து, மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை மருத்துவமனை வளாகம், திருவள்ளூர் முகவரிக்கு 23.03.2020 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிட வேண்டும் அல்லது நேரிலும் ஒப்படைக்கலாம்.
7. விண்ணப்பிக்கும் பதவியின் பெயரினை மேல் உறையின்மீது பெரிய எழுத்துக்களில் தவறாது குறிப்பிட வேண்டும்.
8. மேற்கண்ட பதவிகளுக்கு நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும். நேர்முக தேர்வினை எந்த நிலையிலும் நிறுத்துவதற்கு / ரத்து செய்வதற்கும் மாவட்ட ஆட்சியருக்கு முழு அதிகாரம் உண்டு.
9. மேல்குறிப்பிட்ட அனைத்து பதவிகளுக்கும் மாற்றுதிறனாளிகளுக்கும் 10 வருடம் உச்ச வயது வரம்பில் கூடுதலாக வழங்கப்படும்.
10. ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி கல்லூரி படிப்பிற்கு குறைந்ததாக இருந்தால் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒரு விண்ணப்பதாரர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் எந்த சாதியை சார்ந்தவராக இருப்பினும் குறைந்த அளவு பொதுக் கல்வியை காட்டிலும், மேற்பட்ட பொதுக்கல்வித் தகுதியை பெற்றவராய் இருந்து அல்லது கல்லூரிப் படிப்பு பட்டம் பெற்றிருந்து நியமிக்கப்படுவதற்கு மற்றபடி தகுதி உடையவராய் இருந்தால் நியமிக்கப்படுவதற்காக வயதுவரம்பு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அந்த வயது அவருக்கு பொருந்தாது.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை,
திருவள்ளூர்.